கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

முதலாம் வருட/முதலாம் அரையாண்டு பொதுக் கலைமாணித் தேர்வு - 2004/2005 ( ஜனவரி/பெப்ரவரி 2006)

# SOCS 1101 சமூகவியலுக்கு ஓர் அறிமுகம்

நேரம் : 02 மணித்தியாலங்கள்

பகுதி – I இலிருந்து எல்லா வினாக்களுக்கும் பகுதி – II இல் இரண்டு வினாக்களுக்கும் பகுதி – III இல் ஒரு வினாவுக்கும் விடை தருக.

## பகுதி – I

01. சமூகவியல் தோற்றம் பெற்ற சூழலை குறிப்பிடுக.

02. சமூகவியலின் தந்தை என்று ஏன் அகஸ்கோம்ட் (August Comte) அழைக்கப்படுகின்றார் என்பதற்கு குறிப்புரை தருக.

03. சமூகவியல் கற்பதனால் ஏற்படும் பயன்கள் எவைகள் என புலப்படுத்துக.

04. சமூகவியல் அறிஞர்களிடையே சமூகவியல் ஆய்வுப் பரப்பு (Scope) பற்றி இரு வேறு சிந்தனைகள் காணப்படுகின்றன அவை பற்றி குறிப்பிடுக.

05. சமூகவியலும் மானிடவியலும் எவ்வாறு தொடர்புடையன எனக் கூறுக.

06. குழு என்பதை சமூகவியலில் எவ்வாறு விளங்கிக் கொள்ளலாம் குறிப்பிடுக.

07. "அகமணம்" என்பதால் விளங்குவது யாது குறிப்புரை தருக.

08. சமூகமயமாதலில் முக்கிய முகவராக யாரை இனங்காட்டுவீர் என குறிப்புரை தருக.

09. கூட்டு குடும்பம் என்பதை வரையறை செய்க.

10. பண்பாடு என்பதால் விளங்குவது யாது குறிப்புரை தருக.

(30 புள்ளிகள்)

## பகுதி – II

01. (அ) சமூகவியல் என்றால் என்ன? என்பது பற்றி வரைவிலக்கணங்களின் துணைகொண்டு ஆராய்க.

(ஆ) சமூகவியல் ஏனைய சமூக விஞ்ஞானங்களுடன் கொண்டுள்ள தொடர்புகள் பற்றி சுருக்கமான கட்டுரை வரைக.

(20 புள்ளிகள்)

02. (அ) சமூகவியலின் ஆய்வுத் தன்மை (Nature) பற்றியும் சமூகவியல் ஒரு விஞ்ஞானமா? என்பது பற்றி ஒரு விபரிப்பு செய்க.

(ஆ) சமூகம் (Society) சமுதாயம் (Community) பண்பாடு (Culture) நாகரிகம் (Civilization) போன்றவை பற்றி விளக்குக.

(20 புள்ளிகள்)

03. (அ) இடையூடாட்டம் (Interaction) எமது மாணவர் சமுதாயத்துக்கு அவசியமானது என்பது பற்றி இடையூடாட்ட கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.

(ஆ) "குடும்பம் சமூக நிறுவனங்களில் மிக முக்கியமானது" இக்கூற்றைப் பற்றி சிறு கட்டுரை வரைக.

(20 புள்ளிகள்)

## பகுதி – III

01. சமூக நிறுவனங்களில் திருமணம், சமயம் ஆகியவற்றில் ஏற்பட்ட மாற்றங்கள் பற்றி உதாரணங்களுடன் விளக்கமான கட்டுரை வரைக.

(30 புள்ளிகள்)

02. சமூக மாற்றம் பற்றிய கோட்பாடுகளில் மூன்றைப் பற்றி விளக்கி அவை தற்காலத்தில் எமது சமூகத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்களுடன் ஒப்பிட்டு விளக்குக.

(30 புள்ளிகள்)

********